**செய்தி வெளியீடு**
**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செ.வெ.எண்.178** **நாள் : 09.11.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பாக நோய்த்தடுப்பு மற்றும் சுகாதார விழிப்புணர்வு முகாம் இன்று நடைபெற்றது**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக பல்வேறு நோய்த்தடுப்பு மற்றும் சுகாதார விழிப்புணர்வு முகாம்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ,ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி, கல்வி நிறுவனங்கள், குடிசைப் பகுதிகள் மற்றும் சென்னை மாநகர் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் சிறப்பு நிகழ்வாக, இன்று (09.11.2018) அண்ணாநகர் மண்டலம், புரசைவாக்கம் அழகப்பா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியில் நோய்த்தடுப்பு மற்றும் சுகாதார விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், சுமார் 1300 மாணவ, மாணவியர்கள் மற்றும் 75 ஆசிரியர்கள் பங்குப் பெற்றனர். இதில் மலேரியா, டெங்கு, பன்றிக் காய்ச்சல் மற்றும் எலிக் காய்ச்சல் போன்ற நோய்கள் எவ்வாறு உருவாகின்றன, அதன் அறிகுறிகள் அவற்றை தடுக்கும் முறைகள் குறித்து விழிப்புணர்வு அளிக்கப்பட்டு, முறையாக கைகழுவுவது குறித்து செய்முறை விளக்கமும் செய்யப்பட்டது. அனைத்து மாணவ, மாணவியர்களும் முறையாக கை கழுவினர். மேலும், அனைத்து மாணவ, மாணவியர்களும் பெருநகர சென்னை மாநகராட்சியின் சுகாதார தூதர்களாக அறிவிக்கப்பட்டு. சுகாதார தூதர் அட்டை வழங்கப்பட்டது. பின்னர், மாணவ, மாணவியர்கள் அனைவரும் டெங்கு காய்ச்சல் தடுப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இறுதியில், மாணவ, மாணவியர்கள் அனைவரும் விழிப்புணர்வு பேனர்கள் மற்றும் பதாகைகளை ஏந்தியபடி இசை முழக்கத்துடன் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இப்பேரணியானது, பள்ளி வளாகத்தில் தொடங்கி டாக்டர் அழகப்பா சாலை, வள்ளியம்மாள் சாலை, ரித்தடர்ன் சாலை, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கங்காதீஸ்வரர் கோவில் தெருவில் நிறைவடைந்தது. இதில் டெங்கு கொசு போல் வேடமணிந்த மாநகராட்சி ஊழியரால் அனைத்து பொதுமக்களுக்கும் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

இம்முகாமில், பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் முனைவர் டி.ஜி.சீனிவாசன், பள்ளி தாளாளர் டாக்டர் உமையாள் ராமநாதன். பசுமைப் படை ஒருங்கிணைப்பாளர் ஜி. தங்கராஜ், ரெயின்போ ரோட்டரி கிளப் தலைவர் திருமதி உமா மகேஸ்வரி, வேப்பேரி காவல்துறை ஆய்வாளர் வீரகுமார், சுகாதார ஆய்வாளர் கண்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**